38—

அலுவலகக் கட்டடம்

***3575—திரு. கோ. ஐயப்பன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் தொகுதி, கடலூர் நகரில் பொதுப் பணித் துறை அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடலூரில் 3 உப கோட்டங்கள், 5 பிரிவு அலுவலகங்களை உள்ளடக்கிய ஒரு கட்டுமானம் மற்றும் ஒரு பராமரிப்புக் கோட்டம் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன் அவர்கள்.*

திரு. கோ. ஐயப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி, மாண்புமிகு முதல்வர் தளபதியார் அவர்களையும், இளைய தளபதி அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டடங்கள் மற்றும் நீர்வளத் துறை அலுவலகங்கள் மிகவும் சிதிலமடைந்து, அலுவலகம் அமைப்பதற்குச் சரியான நிலைப்பாடு இல்லாமல் இருந்த காரணத்தினால், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே நான் இரண்டு மாதத்திற்கு முன் மனுவாகக் கொடுத்த அந்த நிலைப்பாட்டை அதிகாரிகளோடு கலந்தாலோசித்து, 4.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பு செய்ததற்கு முதலில் என்னுடைய நன்றியையும், வணக்கங்களையும் தெரிவித்துக்கொண்டு . . .

2021 செப்டம்பர் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி சொல்லியாகிவிட்டது. உங்களுடைய கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடு)*

திரு. கோ. ஐயப்பன்: *அதோடு மட்டுமல்லாமல், கடலூர் பெருநகராட்சியை மாநகராட்சியாகத் தரமுயர்த்தி அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், துறையைச் சார்ந்த அமைச்சர் பெருமக்களுக்கும் நன்றி கூறி, . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்விக்கு வாருங்கள்.*

திரு. கோ. ஐயப்பன்: *4.65 கோடி ரூபாய் நிதியானது சிறந்த கட்டடங்களை அமைப்பதற்குப் போதுமான நிதியாக இருக்காது என்ற நிலையை உணர்ந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இது பெருநகராட்சியாக இருந்தபோது தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீடுகள். இப்போது மாநகராட்சியாகத் தரமுயர்த்தப்பட்ட பிறகு, பல்வேறு பணிகள் அங்கே நடைபெற பொதுப் பணித் துறையினுடைய செயல்பாடுகள், அலுவலகங்கள் அங்கே சிறந்து விளங்க அது ஏதுவாக இருக்கும் என்ற நிலைப்பாட்டில் அங்கே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, உங்களுக்கு அந்த நிதி போதாது, கூடுதல் நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டு அமருங்கள்.*

திரு. கோ. ஐயப்பன்: *ஆம், கூடுதல் நிதியை ஒதுக்கீடு செய்து, சிறந்த கட்டடத்தை, நல்ல தரம்வாய்ந்த கட்டடங்களைக் கட்டி, கீழ்தளத்தில்* car parking *மற்றும் மேல் தளங்கள், அதற்கும் மேல் தளங்களை . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *'கட்டித் தருவீர்களா' என்று கேட்டு அமருங்கள்.*

திரு. கோ. ஐயப்பன்: *நிதி கூடுதலாக ஒதுக்கி, சிறந்த கட்டடத்தை அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்மிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது செயல்பட்டு வரும் பொதுப் பணித் துறை கோட்ட அலுவலகம் என்பது, 491.25 சதுர*

மீட்டர் பரப்பில் 1914-ல் Madras Terrace roof என்கிற RCC கூரையாக மாற்றியமைக்கப்பட்டு, மிகவும் பழமையாக, பழுதடைந்திருந்த காரணத்தினால் புதிய கோட்ட அலுவலகம் கட்ட திட்டமிடப்பட்டது. தரைத்தளம் 555 சதுர மீட்டர், முதல் தளம் 550 சதுர மீட்டர், இரண்டாவது தளம் 322 சதுர மீட்டர் உட்பட மொத்தம் 1,432 சதுர மீட்டர் பரப்பளவில் புதிய கோட்ட அலுவலகக் கட்டடம் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டு, அலுவலக நடைமுறை வசதிக்காக புதிய அலுவலகம் கட்டும்வரை பழைய அலுவலகக் கட்டடத்தையே பயன்படுத்தி, புதிய அலுவலகம் கட்டி முடித்தபின், பழைய கோட்ட அலுவலகத்தை காலி செய்வதென்று முடிவு செய்யப்பட்டது. இதற்காக 4.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அது திட்டமிடப்பட்டு, அதைப் புதிதாகக் கட்டவிருக்கிறோம். அதில் பற்றாக்குறை ஏற்படுமேயானால் மீண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அவர் நினைப்பதுபோல, அழகாக, அதே நேரத்திலே நிருவாகம் பார்க்கிற அளவிற்கு வசதியாக அந்தக் கட்டடம் கட்டித் தரப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன் அவர்கள். மிகவும் சுருக்கமாகக் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. கோ. ஐயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. கிராமங்களிலே, 'எள் என்றால் எண்ணெய்யாக,' 'பருத்தி என்றால் பொலிவாக' காய்க்கின்றன என்று சொல்வார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைச்சரவையிலே ஒரு சிறந்த அமைச்சர். அந்தத் துறையை சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு இதுவே ஓர் உதாரணம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நன்றி சொல்லி உட்காருங்கள்.

திரு. கோ. ஐயப்பன்: சிறந்த கட்டடத்தை உருவாக்கித் தருகின்ற. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் தருகிறேன் என்று சொல்லிவிட்டார். அவர்களுக்கு நன்றி கூறி அமருங்கள்.

2021 செப்டம்பர் 9]

திரு. கோ. ஐயப்பன்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.*

திரு. ப. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாவின் தம்பியாக, கடற்கரையில் உறங்கிக் கொண்டிருக்கின்ற என் தலைவரை வணங்கி, சாதாரண* mike set, sound service *போட்டுக் கொண்டிருந்த என்னை, நகர்மன்ற உறுப்பினராக்கி, நகர்மன்றத் தலைவராக்கி, மாநகராட்சி மேயராக்கி, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. ப. கார்த்திகேயன்: *கழகத்திலே செயற்குழு உறுப்பினராக்கி, மாநகரச் செயலாளராக்கி, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்கள் வரலாற்றைப் பிறகு சொல்லலாம். கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) ஒரு கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடு) ஒரு கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. ப. கார்த்திகேயன்: *ஒரே நிமிடம், சொல்லி முடித்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *துணை சபாநாயகர் உங்களுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார். ஒரு கேள்வியைக் கேளுங்கள்.*

முற்பகல் 10–20

திரு. ப. கார்த்திகேயன்: *மீண்டும் என்னை* MLA *ஆக்கிய என் தலைவர் தளபதி அவர்களை வணங்கி, அதேபோல, பொதுச் செயலாளர், நம்முடைய அவை முன்னவர் அவர்களை வணங்கி,. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்களிடம் கேள்வி இருக்கிறதா, இல்லையா?*

திரு. ப. கார்த்திகேயன்: *கேள்வி இருக்கிறது, இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வியைக் கேளுங்கள். இல்லையென்றால் நான் அடுத்த கேள்விக்குச் சென்றுவிடுவேன்.*

திரு. ப. கார்த்திகேயன்: சரி. நம்முடைய தலைவர் அவர்கள்தான் வேலூர் மாநகராட்சியை உருவாக்கித் தந்தார்கள். எனவே, Krishna Theatre-லிருந்து Crown Talkies வரை மேம்பாலமும், பச்சையப்பாவிலிருந்து Mandi street வரை மேம்பாலமும், CMC வரையிலே சுரங்கப் பாதையும் கட்டித் தர வேண்டும். நம்முடைய தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருக்கின்ற காலத்தில் பொதுப் பணித் துறையின் சார்பில் கட்டித் தர வேண்டும்.

அதேபோல, வெங்கடேஸ்வரா Higher Secondary School-க்கு மாணவச் செல்வங்களெல்லாம் செல்கின்ற காரணத்தினால் அங்கு ஒரு சுரங்கப் பாதை கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மேம்பாலம் கட்டித் தருவார்களா என்று கேட்கிறீர்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அதற்கு பதில் சொல்லுங்கள். அங்கு மேம்பாலம் கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்களுடைய சீரிய ஆட்சியில், பொதுவாக, புறக்கணிக்கப்பட்டிருக்கிற மாநகராட்சிகளிலெல்லாம் பல்வேறு இடங்களில் மேம்பாலம் கட்டப்பட வேண்டுமென்று திட்டமிடப்பட்டு, இப்பொழுது திருநெல்வேலி, மதுரை, திருச்சி ஆகிய மாநகராட்சிகளிலே மேம்பாலம் கட்டப்பட்டிருக்கிறது. வேலூருக்கும் பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. வேலூர் மாநகராட்சியில் மேம்பாலம் கட்ட வேண்டுமென்று நம்முடைய அவை முன்னவர் அவர்கள்கூட என்னிடத்தில் நேரடியாகக் கேட்டுக்கொண்டார்கள். அதனை நான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு மாத காலத்திற்கு முன்பாகவே கொண்டு சென்றேன். வேலூரில் மேம்பாலம் கட்ட வேண்டுமென்ற நம்முடைய அவை முன்னவர் அவர்களின் கோரிக்கையையும் ஏற்று, அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திகேயன் அவர்களுடைய கோரிக்கையையும் ஏற்று, விரைவிலே அதனைக் கட்டுவதற்காக திட்டமிடப்பட்டு, DPR தயார் செய்யப்பட்டு வருகிறது. அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, மதிப்பீடுகளெல்லாம் தயார் செய்யப்பட்டு, அனுமதி பெற்று, வருங்காலங்களிலே வேலூர்

2021 செப்டம்பர் 9]

மாநகராட்சியில் அந்த மேம்பாலம் கட்டப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பாபு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

39—

சிப்காட் தொழிற்பூங்கா

***3248—திரு. மு. பாபு:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யூர் தொகுதியில் சிப்காட் தொழிற் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிப்காட் நிறுவனம் தமிழ்நாட்டில் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்கள் தொடங்க ஏதுவாக, தொழில் வாய்ப்புள்ள பகுதிகளில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய தொழிற் பூங்காக்களை ஏற்படுத்தி பராமரித்து வருகிறது. இந்நிறுவனம் இதுவரை, செங்கல்பட்டு மாவட்டம் உட்பட 15 மாவட்டங்களில் 6 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உட்பட 24 தொழிற்பூங்காக்களை சுமார் 34,900 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தி, பராமரித்து வருகிறது. செய்யூர் தொகுதி அடங்கிய செங்கல்பட்டு மாவட்டம், சிறுசேரி பகுதியில் சிப்காட் நிறுவனம்மூலம் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று 782 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தப்பட்டு, தற்போது செயல்பாட்டில் உள்ளது. இங்கு பல்வேறு முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தொழிற்கூடங்களை நிறுவியுள்ளன.

சிப்காட் நிறுவனம், புதிய தொழிற்பூங்காக்களை உருவாக்குகையில், ஒரு தொழிற்பூங்காவினை ஏற்படுத்தும் அளவிற்கு, குறிப்பிட்ட அப்பகுதியில் ஒருங்கிணைந்த போதிய நில இருப்பு, சாலை, இரயில், விமானப் போக்குவரத்து வசதி